DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.332/2025**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோகன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சந்தவழியான் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 21.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதகுபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.09.2025 ம் தேதி பகல் 12.00 மணிக்கு வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அ.சா.1 ஜெய்கணேஷ் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்.78/2025, 331(4), 305(a) இதசவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சாஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எதிரிகளை தேடியபோது எதிரி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.286/2025 ல் கைது செய்யப்பட்டு 1ம் எதிரி திருப்பத்தூர் கிளைச்சிறையிலும் 2வது எதிரி சிவகங்கை கிளைச்சிறையிலும் இருந்த தகவல் தெரிந்து இருவரையும் சம்பிரதாய கைது செய்து பின்னர் சமூகம் நீதிமன்றம் கொண்டு இவ்வழக்கில் காவல் அடைப்புக்கு உட்படுத்தினேன். பின்னர் எதிரி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.286/2025 ல் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் திரு.ஜெயபாலன் கைப்பற்றி கொடுத்த வெண்கலகுத்துவிளக்கை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**மேற்படி படிவம் 91 அ.சாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.ஜெயபாலனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகாரை நேரடியாக காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். போன் மூலமாக எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. புகார் கொடுத்ததில் இருந்து எத்தனை நாட்கள் கழித்து சிறைச்சாலையில் சம்பிரதாய கைது செய்தேன் என்றால் 19 நாட்கள் கழித்து செய்தேன். சிறைச்சாலையில் வைத்து கைது செய்யும்போதுதான் 1ம் எதிரி இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெரியவந்தது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் பொய்யாக 1வது எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தை தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் முன்னிலையில் கொடுத்துள்ளார்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் பதிவுசெய்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் 2வது எதிரி மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.